இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 201 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 19 – செவ்வாய்க்கிழமை 03 மார்ச் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 201: Thiruvalluvar Year - 2057 - Maasi 19 - Tuesday 03 March 2026 - Dak 8 Pages ₹ 5.00





உழவர் வாழ்வை உயர்த்தும் ஸ்டாலின் அரசு!

- 2 இலட்சம் விவசாயிகளுக்கு புதிய இலவச மின் இணைப்புகள்
- நிகர சாகுபடி பரப்பு நான்கே ஆண்டுகளில் 2.05 இலட்சம் எக்டர் உயர்வு
- 16.22 இலட்சம் மெட்ரிக் டன் உயர்ந்து உச்சம் தொட்ட உணவு தானிய உற்பத்தி

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம் !!



வெல்வோம் ஒன்றாக!

செ.ம.தொ.இ / 251 / வரைகலை / 2026


## ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது!

# மீண்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சியே அமையும்!

## ‘தி வீக்’ ஆங்கில வார இதழ் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, மார்ச் 3 -**

**“ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது; மீண்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சியே அமையும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘தி வீக்’ ஆங்கில வார இதழ் நடத்திய நிகழ்ச்சியில் உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

**முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) சென்னையில் THE WEEK ஆங்கில வார இதழ் சார்பில் நடைபெற்ற “TAMIL NADU LEADERSHIP SUMMIT” நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஆற்றிய உரை வருமாறு :-**

‘தி வீக்’ இதழின் “தமிழ்நாடு லீடர்-ஷிப் உச்சி மாநாடு” நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான காலை வணக்கம்.

தென்னிந்தியாவின் முன்னணி இதழாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய ‘THE WEEK’ நடத்தும், “TAMIL NADU LEADERSHIP SUMMIT 2026” நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தொடக்க வுரை ஆற்று வதில் நான் மிகுந்த மகிழ்ச் சியடைகிறேன். திராவிட குடும்பத்தைச் சேர்ந்த, நம் சகோதர மாநிலமான கேரளத்தின் முன்னணி ஊடக குழுமமான மனோரமா குழுமத்தை தமிழ்நாட்டிற்கு நான் மனதார வரவேற்கிறேன்.

தமிழ்நாட்டில் நம்முடைய ‘திராவிட மாடல்’ அரசு செய்திருக்கும் சாதனைகளையும், நிறைவேற்றியிருக்கும் திட்டங்களையும், இந்திய அளவில் எல்லோருக்கும் கொண்டுசென்று சேர்ப்பதற்கான ஒரு மேடையை அமைத்து தந்ததற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) சென்னையில் THE WEEK ஆங்கில வார இதழ் சார்பில் நடைபெற்ற “TAMIL NADU LEADERSHIP SUMMIT” நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் தா.மோ. அன்பரசன், முன்னாள் ஒன்றிய அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் ப. சிதம்பரம், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன், ‘தி வீக்’ இதழின் இயக்குநர் ரியாத் மேத்யூ, தலைமை நிலைய ஆசிரியர் ஹர்சா மேத்யூ, முதன்மை செய்தி ஆசிரியர் ஸ்டான்லி தாமஸ், தலைமை நிலைய செய்தியாளர் திருமதி லட்சுமி சுப்ரமணியன், பொருளாதார ஆலோசனைக் குழு உறுப்பினர் அரவிந்த் சுப்பிரமணியன், பல்வேறு தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள், பொருளாதார வல்லுநர்கள் மற்றும் பத்திரிகைத் துறையைச் சார்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

### எல்லா துறைகளிலும் ‘ஆல்ரவுண்டர்’

தமிழ்நாட்டிற்கான என்னுடைய கனவு என்பது, தனிப்பட்ட ஸ்டாலினின் கனவு மட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழினத்தின் எதிர்பார்ப்புகளை உள்ளடக்கியதுதான் என்னுடைய கனவு! நூற்றாண்டுக்கு முன்பு திராவிட இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து, தமிழர்கள் காணத் தொடங்கிய கனவு! அதை நோக்கிய எங்களின் பயணத்தில் கடந்த 5 ஆண்டுகள் என்பது பெரும் பாய்ச்சலை கண்டிருக்கிறது. எல்லா துறைகளிலும் ‘ஆல்-ரவுண்டராக’ உயர்ந்து இருக்கிறோம். எல்லா பகுதிகளிலும் பரவலான, சமச்சீரான எல்லோருக்குமான வளர்ச்சியை எங்கள் திராவிடமாடல் ஆட்சியில் சாதித்து காட்டியிருக்கிறோம்!

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் தங்களின் பகுதியில், தங்களின் வீட்டில் எந்த அளவிற்கு முன்னேற்றம் வந்திருக்கிறது என்று கண்கூடாக பார்க்கிறார்கள். அதனால்தான், ஆட்சிக்கு ஆதரவான அலை வீசுகிறது.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

## தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சி என்ற

# பிரதமரின் கனவு பலிக்காது!

## ‘தி வீக்’ நடத்திய நிகழ்ச்சியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பேட்டியில் திட்டவட்டம்!

**சென்னை, மார்ச் 3 -**

**“தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சி என்ற பிரதமரின் கனவு பலிக்காது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘தி வீக்’ ஆங்கில வார இதழ் நடத்திய நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றிய பின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.**

### இன்னும் கட்சிகள் இணைய இருக்கிறது!

THE WEEK ஆங்கில வார இதழ் சார்பில் நடைபெற்ற “TAMIL NADU LEADERSHIP SUMMIT” நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:-

**செய்தியாளர் -** உங்கள் தலைமையில் ஒரு மெகா கூட்டணியை கட்டி அமைத்திருக்கிறீர்கள். உங்களை விமர்சித்தவர்கள், உங்களை எதிர்த்து நின்றவர்கள் அனைவரும்உங்கள்கூட்டணிக்கு உங்கள் தலைமையின் கீழ் வந்திருக்கிறார்கள். இப்படி எல்லோரையும் கட்டி அரவணைத்து கொண்டு வருவது என்பது ஒரு பெரிய சவாலாக இருந்திருக்கும். இந்த சவாலை எப்படி தொடர்ந்து சமாளிக்கப்போகிறீர்கள்?

### எண்ணிக்கையில் அமையப்பெற்ற கூட்டணி அல்ல; எண்ணத்தால் உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டணி!

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** இது எண்ணிக்கையில் அமையப் பெற்ற கூட்டணி அல்ல. எண்ணத்தால் உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டணி. தமிழ்நாட்டில் இந்த கூட்டணி தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தலில் தொடர்ந்துக்கொண்டிருக்கிறது. இப்போது அமைய இருக்கும் இந்தக் கூட்டணியிலும் இந்த தேர்தலிலும் இன்னும் பல கட்சிகள் இணைந்திருக்கின்றன. இன்னும் இணைய இருக்கிறது. அதனால், இதை நான் சவாலாக கருதவில்லை. இதை கொள்கைக் கூட்டணியாக நாங்கள் கொண்டு செல்கிறோம்.

**செய்தியாளர் -** நேற்று நம்முடைய பிரதமர் மதுரையில் பேசும் போது தி.மு.க. மீண்டும் ஆட்சி அமைப்பது ஒரு கானல் நீராக இருக்கும் என்று சொல்லியிருந்தார்கள்?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் -** மோடியைப் பொறுத்தவரை சொல்லவேண்டுமென்றால், ஏற்கெனவே தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க வேண்டும் என்று தான் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள். அதுதான் கானல் நீராக சென்றுகொண்டே இருக்கிறதே தவிர, அவர் சொல்வது போன்று இல்லை.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.3.2026) சென்னையில் THE WEEK ஆங்கில வார இதழ் சார்பில் நடைபெற்ற “TAMIL NADU LEADERSHIP SUMMIT” நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.